பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஆண்டு வைகாசி மீ 07 உ செவ்வாய்க்கிழமை [21—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 168

## வடமாநிலங்களில் 45 பேர் உயிரிழப்பு

# இந்தியத் தேர்தலில் முதல் நாளே வன்முறை!

## 500க்கும் அதிக வாக்களிப்பு நிலையங்கள் விஷமிகளினால் கைப்பற்றப்பட்டன

புதுடில்லி, மே 21

இந்தியத் தேர்தலில் நேற்று நடைபெற்ற முதற்கட்ட வாக்களிப்பின்போதே பெரும் வன்முறை வெடித்தது! வட இந்திய மாநிலங்களில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளில் மட்டும் 45 பேர் வரை உயிரிழந்தனர்!! ஐநூறுக்கும் அதிகமான வாக்களிப்பு நிலையங்களை வன்முறைக் கும்பல்கள் கைப்பற்றின!!!

முன்னர் எப்போதும் இல்லாதவாறு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் முதற்கட்ட தேர்தல் நேற்று நடைபெற்றது. எனினும் மிகப் பெரியளவில் வன்முறைகள் வெடித்தன.

பீஹார், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பெருமளவிலும், புதுடில்லி யூனியன் பிரதேசம், ஆந்திர மாநிலம் ஆகியவற்றிலும் ஓரளவும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

பீஹாரில் மட்டும் 435 வாக்களிப்பு நிலையங்களை வன்முறைக் கும்பல்கள் கைப்பற்றின இதனையடுத்து அந்தப் பகுதிகளில் வாக்களிப்பு ஒத்தி வைக்கப்பட்டது அப் பகுதிகளில் மறு வாக்குப் பதிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மாநிலத்தில் வன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### தேர்தல் அதிகாரி கொலை

புதுடில்லி, மே 21

வட இந்தியாவில் நேற்று நடந்த முதற்கட்ட வாக்களிப்பின் போது இடம்பெற்ற வன்செயல்களில் உயிரிழந்த 45 பேரில் ஒருவர் தேர்தல் அதிகாரி ஆவார்.

அவர் விஷமிகள் சிலரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள 40 லட்சம் ஊழியர்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் 43 லட்சம் ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்கீழ் உயிரிழக்கும் ஊழியருக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

### மீரட் நகரிலும் கலவரம் 17 பேர் உயிரிழந்தனா

புதுடில்லி, மே 21

தேர்தல் நடைபெற்ற உத்தரப் பிரதேசம், மீரட் நகரில் திடீரென வெடித்த இந்து—முஸ்லிம் கலவரத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து அங்கு காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

வாக்களிக்கச் சென்ற முஸ்லிம்கள் சிலர், வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டபோதே கலவரம் வெடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

உத்தரப் பிரதேசத்தின் வேறு சில பகுதிகளிலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இராணுவம் அழைக்கப்பட்டது.

### தடுத்து வைக்கப்பட்டோர் நேற்று மாலை விடுவிப்பு

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் நேற்று மாலை 4 மணியளவில் வலிகாமம் பிரிவு சுன்னாகம் செயலகத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில் வவுனியாப் பகுதியைச் சேர்ந்த 14 பேரைத் தவிர, ஏனையோரை அவர்களது உறவினர்கள் பொறுப்பேற்று, கூட்டிச் சென்றனர்.

விடுவிக்கப்படாதோரை, வவுனியாப் பகுதிக்குக் கொண்டு சென்று, அவர்களது உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடுவிப்பு நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். [ஓ-90]

### தாக்குதலில் அறுவர் பலி

கொழும்பு, மே 21

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பகுதியில் "டிராக்டர்" ஒன்றில் பயணம் செய்தவர்கள் மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 முஸ்லிம்களும் ஒரு சிங்களவரும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. [ஓ-எ]

### பாடசாலை வளவிலும் ஷெல் வெடித்தது

சுழிபுரம், மே 21

காரைநகர், வலந்தலையிலுள்ள படையினர் நேற்று முன்தினம் பல தடவைகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

அனேக ஷெல்கள் பொன்னாலைப் பகுதியில் விழுந்து வெடித்தன. சுழிபுரம் திருவடிநிலை தமிழ்க் கலவன் பாடசாலை வளவிலும் ஷெல் விழுந்து வெடித்தன.

அன்று (ஞாயிறு) பாடசாலை விடுமுறை ஆதலால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. [ஓ-28]

### கட்டுவன், குப்பிளானில் நேற்று விமான குண்டு வீச்சு

பல நாள் இடைவெளியின் பின்னர் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

பொம்மர்களுக்கு உதவியாக 3 ஹெலிகளும் அப்பகுதிகளில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சேதங்கள் குறித்து தெரியவரவில்லை. [ஓ-68]

### ஆனையிறவுப் பகுதியிலும் விமானத் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், மே 21

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளிலும் நேற்றுக் காலையும், மாலையும் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

இரு பொம்மர்கள், அவ்ரோ விமானம் ஒன்று, இரு ஹெலிகள் என்பன தாக்குதல்களை நடத்தின.

சேத விவரங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை.

### அச்சுவேலியில் ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், மே 21

அச்சுவேலிப் பகுதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் ஹெலி தாக்குதல் நடத்தியது.

சேத விவரம் தெரியவரவில்லை. [ஓ]

### வெள்ளை வான் மர்மம் திருமலையில் தொடர்கிறது

#### 6 தமிழரின் கதி தெரியவில்லை

திருகோணமலை மாவட்டம், நிலாவெளி கடற்கரை விடுதியில் கடந்த 11 ஆம் திகதி வேலை செய்துகொண்டிருந்த 6 பொது மக்கள், வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்களால் கூட்டிச் செல்லப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக இந்த வெள்ளை வானின் மர்ம நடவடிக்கை தொடர்கிறது.

கூட்டிச் செல்லப்பட்ட அறுவரில் ஐவரின் பெயர்கள் வருமாறு:-

றட்ணம், ரஞ்சிதம், சந்திரா, சோமசுந்தரம், முத்துலிங்கம்.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இன்னும் தெரியவில்லை. [ஓ]

### முச்சந்தி முரளி



அப்ப...... இந்திய எலெக்ஷன் 'சூடு' பிடிச்சிருக்கு என்று சொல்லுங்கோ ......!

### இடம் பெயர்ந்தோருக்கு மாதம் 3 முறை உலர் உணவு

யாழ்ப்பாணம், மே 21

சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் "இ" அட்டை வைத்திருப்போருக்கு மாதந்தோறும் மூன்று தடவைகள் உலர் உணவு வழங்கப்படும்.

முகாமில் இருப்பவர்கள், உறவினர் வீடுகளில் இருப்பவர்கள் என்ற வேறுபாடு இன்றி இந்த உலர் உணவு எல்லோருக்கும் வழங்கப்படும்.

மே மாதத்துக்கு உரிய உலர் உணவுகள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக வழங்கப்பட வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக உதவி அரசாங்க அதிபர்களுக்கும், ப.நோ. கூட்டுறவுச் சங்க

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முத்தமிழ் விழா ஜூன் 6 முதல்

யாழ்ப்பாணம், மே 21

தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை மங்களகரமாக நடைபெறவுள்ளது. ... பட்டப்படி, மானிப்பாய், புங்குடுதீவு, சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய இடங்களில் இவ்விழா நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பண்டைத் தமிழரின் பெருமைகள், பழந்தமிழர் சால்புகள், தமிழர்தம் கலை, பண்பாட்டுத் தனித்துவங்கள், தமிழீழ மக்களின் — தமிழீழ மண்ணின் தேவைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையிலான அறுபதுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் இயல், இசை, நாடக வடிவங்களில் பொங்கிப் பொலிந்திட உள்ளன.

தமிழீழ பெருமக்கள் யாவரும் ஒருங்கிணைந்து திரண்டு வந்து, வரலாறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

பலசரக்கு கடைக்கு நல்ல அனுபவமுள்ள பெண் பில் கிளார்க் தேவை. சிறந்த கையெழுத்து உடையவராக இருக்க வேண்டும். தங்குவசதி உண்டு. தொடர்பு: இல 807, C/o உதயன். [4085]

## PERSONAL CLASSES

[கணிதம்]

G. C. E.[ O/L] 90. 91. மற்றும், ஆண்டுகள் 6, 7, 8, 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சித்திக்கு உத்தரவாதம். விவரங்களுக்கு சந்தையா பரராஜசேகரன், 8D, Flechers Lane, Chundikuli [16842]

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

### முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு

[M Phil. Q]

1990/91

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தி அடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், தமிழ், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, மெய்யியல், மொழியியல் நுண்கலை.

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்படிவங்களை நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் 20 - 05 - 1991 இலிருந்து 20 - 06 - 1991 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 10 ரூபா செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்ப படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டிய 38×25 ச.மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30-06-1991 ஆம் திகதிக்கு முன்பாக கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். 30 - 06 - 1991 திகதிக்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

— பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
16-05-1991 [சி/5076]

## தேவை

வாழைப்பழம் தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். [சி-5071]

## நோவு வைத்தியம்

ஓட்டசுட்டபுலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ் ரீ மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4051]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 10 — 04 — 1964 | 21 — 05 — 1986 |

செல்வன்

### குமாரசுவாமி சர்வானந்தன்

செல்வ மைந்தன் சர்வா!
நீர் எம்மை விட்டுச் சென்றாலும்
எம் இதயங்கள் துடிப்பிழந்தன - ஆயினும்

நீர் செய்த தவப்பலனால்
நாம் இங்கு வாழ்கின்றோம்
ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும்
எம்மை விட்டு உம் நினைவகலாது.

உங்கள் பிரிவால் வாடும்,

அப்பா, அம்மா,
சகோதரர்கள், அம்மம்மா,
உறவினர்கள், நண்பர்கள்.

இல. 25, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [16858]

## 45 ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் ஐயாமுத்து சிவசாமி

[ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், புலோலி கிழக்கு, பருத்தித்துறை]

| கண்ணில்: | காற்றில்: |
|---|---|
| 19 - 06 - 1913 | 07 - 04 - 1991 |

அன்பின் திருவுருவே பண்பிற்கோர் பொருளே
என்றும் எம்மிதய தெய்வமே!
சுவாசிக்கும் காற்றாய் சுதந்திர மூச்சாய்
சுந்தர வாழ்வு எமக்களித்த சூரியனே
எத்தனை காலங்கள் கடந்தாலும்
அத்தனை காலத்தும் அழியாது உம் நினைவு;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உதவி அரசாங்க அதிபர்-
பணிமனை அருகாமை,
சண்டிலிப்பாய். [4086]

## 2, 500 தமிழர் தடுத்து வைப்பு

கொழும்பு, மே 21 அம்பாறை மாவட்டத்தில் ஆயுதப் படையினர் நடத்திய சுற்றி வளைப்பின் போது சுமார் 2, 500 தமிழர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இ-எ]

## உடுவில் மகளிர் கல்லூரி

க. பொ. த. உயர்தர வகுப்பிற்கு [1993] விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை நேரடியாகக் கையளிக்கவும்.

விணணப்ப முடிவு திகதி: 25 05 - 1991

அனுமதிப் பரீட்சை: 27 - ?5 - 91, 28 05 91

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

பதில் அதிபர்.

[16864]

## டிப்ளோமா மனைப் பொருளியல்

## DIPLOMA IN HOME ECONOMICS

- ★ கேக் ஐசிங்
- ★ சமையற் கலை
  [கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள் மற்றும் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு உணவுகள் தயாரித்தல்]
- ★ தையற் கலை
  [குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான உடைகள் தயாரித்தல், பூ வேலைப்பாடுகள்]
- ★ கை வேலை
  [மக்ரமி, நூல்வேலைப்பாடுகள், கம்பளி நூல்வேலைபபாடுகள், பஞ்சிக் பொம்மைகள் செய்தல், வாழைநார் வேலைப்பாடுகள்]
- ★ பூ வேலை
  [கடதாசியினாலும், துணிகளினாலும் மலர்களை உருவாக்குதல்]
- ★ வர்ணம் தீட்டுதல்
  [துணிகளிலும், கண்ணாடிகளிலும், இசைத் தட்டுக்களிலும்]
- ★ சித்திரக் கலை
  [சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

- ★ பயிற்சி முடிவில் Diploma in Home Economics தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- ★ கிழமை நாள் வகுப்புகள் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களில் காலை 9-00 மணி முதல் பி. ப. 1-00 மணிவரை நடைபெறும்.
- ★ தொழில் புரிவோர், பாடசாலை மாணவிகள் மற்றும் இல்லத்தரசிகளின் வசதிக்காக சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.

சனி, ஞாயிறு வகுப்புகள்
**ஆரம்பம்: 25-05-1991**

கிழமை நாள் வகுப்புகள்
**ஆரம்பம்: 27-05-1991**

o இத்துடன் சங்கீதம், நடனம், வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வகுப்புகளும் மாலை நேர வகுப்புகளாக நடைபெறுகின்றன.

விவரங்களுக்கு:

### கலாலயா

பதிவு இல. 16020,
விக்டோரியா வீதி,
[ஆஸ்பத்திரியின் பின்புறம்]
யாழ்.நகர்

[சி-5073]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சித்த வைத்தியம் வளர்க!

தமிழர்களின் பாரம்பரிய, சுதேச வைத்தியம் சித்த முறையாகும். சித்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட பாவனைப் பொருள்கள் கடந்த வாரம் யாழ் பல்கலைக்கழக சித்த வைத்திய பீடத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

மேலைநாட்டு வைத்தியம் இங்கு அறிமுகமாவதற்கு முன்னர் சுதேச வைத்தியர்களின் மருந்து வகைகளே மக்கள் பிணி போக்கின. சித்த வைத்திய மருந்து வகைகள் எங்கள் மண்ணில் தாராளமாகக் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டே தயாராகின்றன; சித்த வைத்திய முறையில் உணவே மருந்தாகவும் விளங்குகிறது. அந்த அரிய, இலகுவான, எளிதான உடலுக்கு ஆபத்து இல்லாத வைத்திய முறையைப் புறக்கணித்து விட்டு, மேல்நாட்டு மருந்து வகைகளுக்கு எமது மக்கள் அடிமையாகியமை பெரும் வெட்கக்கேடு.

அவை கிடைக்கவில்லை என்றதும் அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட பெண்ணின் நிலையில் ஈழத் தமிழினம் அவஸ்தைப்படுகிறது; அவலப்படுகிறது.

சித்த வைத்தியத்துக்குப் புது மெருகும், புத்துயிரும் ஊட்ட இது நல்ல தருணம். மக்களை மீண்டும் எங்கள் சொந்த வைத்தியத்தை ஆதரிக்கவும், கடைப்பிடிக்கவும் ஊக்குவிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம்.

இப்போதைய போராட்டச் சூழ்நிலை தமிழர்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது என்றே சொல்லலாம். எல்லாத் துறைகளிலும் சொந்த முயற்சியில் சொந்த வளங்களைப் பயன்படுத்திச் சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு விழிப்புணர்வை, உந்துதலை போராட்டம் ஏற்படுத்தி உள்ளது.

இந்த வகையில் விளைபொருள் உற்பத்தித்துறை முதலாம் இடம் வகிக்கிறது. வைத்தியத் துறையிலும் அந்த விழிப்புணர்ச்சியும், சுதேசிய நாட்டத்துக்கான மறுமலர்ச்சியும், மன மாற்றமும் மக்களிடையே ஏற்பட வேண்டும்.

பனடோல் முதல் பிறிட்டோன் வரையான ஆங்கில மருந்து வகைகளுக்குப் பதிலாக, சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்ட குளிகைகள் முதல் குழம்பு வரை மக்களின் நாளாந்த மருந்துப் பொருள்களாகப் பிரபல்யம் பெற வேண்டும். மக்கள் அவற்றைத் தாராளமாகப் பயன்படுத்தப் பழக வேண்டும். அதற்கு......

அவை மக்களுக்கு குறைவின்றிக் கிடைக்க வேண்டும். சந்தையில், மருந்துச் சாலைகளில் தட்டுப்பாடின்றி வாங்கக்கூடிய பொருள்களாக மாற வேண்டும்.

மருந்து தயாரிப்பு முறைகள் வெறும் வாகடங்களாக வைத்தியர்கள், வைத்தியப் பரம்பரையினர் வீடுகளில் கிடந்து தூசி மண்டாமல், பல்கலைக்கழகம் போன்ற இடங்களில் பயன்படுத்தப்பட்டு சுதேச வைத்திய மருந்துத் தொழிலகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

எனவே சித்த வைத்தியர்கள் கூட்டுறவு முறையில் மருந்து உற்பத்தித் தொழிலகங்களை ஆரம்பித்து மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் சந்தைக்கு விட்டால் —

இந்தச் சந்தர்ப்பத்துடன் சித்த வைத்தியம் மீண்டும் முந்திய இடத்துக்கு உயர்ந்து பிரபல்யம் பெற்றுவிடும்.

# யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் கர்ப்பிணிகள் மரணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 21

கடந்த ஜனவரி முதல் ஏப்ரல் வரை போதிய வைத்திய வசதியின்றி கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களில் 10 கர்ப்பிணித் தாய்மார் மரணம் அடைந்துள்ளனர்; அதாவது கர்ப்பிணித் தாய்மார்கள் இறப்பு வீதம் அதிகரித்துள்ளது.

இப்படிக் கூறுகிறார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். சனகசபை.

கர்ப்பிணித்தாய்மார் இறப்பு விகிதம் அதிகரித்து வருவது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற 1987 ஆம் ஆண்டை அடுத்து வந்த 1988 ஆம் ஆண்டில் 43 கர்ப்பிணித் தாய்மார் மரணமடைந்திருந்தனர்.

1989 ஆம் வருடத்தில் 20 ஆகக் குறைந்து 90 ஆம் ஆண்டு 18 ஆக இருந்த கர்ப்பிணித் தாய்மார் மரணங்கள் இந்த வருடம் மீண்டும் அதிகரித்துள்ளன. நான்கு மாதங்களில் 10 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளே இந்த இறப்பு வீதம் அதிகரிப்பதற்குக் காரணம்.

போதிய போஷாக்கின்மை, சுகாதார நிலையங்கள் இயங்காததால் போதிய சிகிச்சையும், பராமரிப்பும் இல்லாமை, போதிய மருந்து வகைகள் இல்லாமை, போதிய போக்குவரத்து வசதி இல்லாமை, விமானக் குண்டு வீச்சுத் தாக்கம் போன்ற காரணங்களாலேயே இறப்பு வீதம் அதிகரித்துள்ளது.

இனியாவது தகுந்த வசதிகள் அளிக்காது விட்டால் இறப்பு வீதம் அதிகரிக்கும் சாத்தியம் ஏற்படும்.

இப்படி அவர் கூறினார். [இ-3]

## பெரும் சேதம்

கொழும்பு, மே 21

வவுனியா இராணுவ நடவடிக்கையின் போது ஓமந்தை மகாவித்தியாலயம் பெரும் சேதத்துக்குள்ளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## மன்னாருக்கு புதிய உ. அ. அதிபர்கள்

யாழ்ப்பாணம், மே 21

கடந்த 8ஆம் திகதி முதல் மன்னாரில் நான்கு உதவி அரசாங்க அதிபர்கள் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

அவர்களில் மூவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவர்.

மன்னார் மடு பிரிவுக்கு யாழ்ப்பாணம், கலட்டி அம்மன் வீதியைச் சேர்ந்த திரு. பா. செந்தில்நந்தனனும் —

மன்னார் நகரப் பிரிவுக்கு யாழ். ஓட்டுமடத்தைச் சேர்ந்த செல்வி எஸ். கணபதிப்பிள்ளையும் —

மாந்தை மேற்குப் பிரிவுக்கு அடம்பனைச் சேர்ந்த திரு. ஏ. பத்திநாதனும் —

மன்னார் முசலி பிரிவுக்கு வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த திரு ஆர். வரதீஸ்வரனும் உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ)

## நிலுவைப்பணம் இல்லை அதிபர்கள் ஏமாற்றம்

மாவிட்டபுரம், மே. 21

1988ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்ட சம்பளத்திட்டத்துக்கான நிலுவைப்பணம் இரண்டாம், மூன்றாம் தர பாடசாலை அதிபர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த அதிபர்கள் தமது நிலைமையைத் தெளிவுபடுத்தி யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் மூலமாகவடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அறிவித்து இருமாதங்களுக்கு மேலாகியும் மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து இதுவரை எதுவித பதிலோ, நடவடிக்கையோ இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-9?]

## சணல் தண்டு கொள்வனவு

யாழ். மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்படும் சணலின் விதைகளை எடுத்த பின்பு எஞ்சியிருக்கும் சணல் தண்டுகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது.

விவசாயிகள் அறுவடை செய்த சணல் தண்டுகளை தங்கள் பகுதி கமநல சேவை நிலையங்களில் கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். [இ]

## பயணிகள் வவுனியா வருகை

கொழும்பு, மே 21

யாழ்ப்பாணத்தில் இருந்து 700க்கு அதிகமான பயணிகள் சுற்று வழிப்பாதை ஊடாக தாண்டிக்குளத்தை தாண்டி கடந்த சனியன்று வவுனியா வந்து சேர்ந்தனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [இ-எ]

## கைதானோரில் இருவர் இலங்கையர்

சென்னை, மே 21

சென்னை நகரில் களவாடப்பட்ட 22 கார்கள் மற்றும் சைக்கிள்களைப் பொலீசார் கைப்பற்றினர்.

இது தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் இருவர் இலங்கையர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## முன்னாள் மந்திரி கைது

டாக்கா, மே 21

பங்களாதேஷின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் அப்துல்மஹ்மூத் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் ஜெனரல் எர்ஷாத் ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இவர் தலைமறைவானார்.

ஜெனரல் எர்ஷாத் தற்சமயம் டாக்கா மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். [இ-எ]

## டாக்காவில் ஆர்ப்பாட்டம்

டாக்கா மே 21

பங்களாதேஷில் சூறாவளி நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்காக அமெரிக்கப்படையினர் எண்ணாயிரம் பேர் சிட்டகொங் நகருக்கு சென்றுள்ளனர்.

இதனை ஆட்சேபித்து டாக்காவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## ராஜீவ் தவறுகளை உணர்ந்து விட்டார்

### தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, மே 21

இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியதன் மூலம் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை ராஜீவ் காந்தி உணர்ந்துகொண்டுள்ளார்.

அமைச்சர் தொண்டமான் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்திய அரசு இனி இலங்கை விஷயத்தில் நேரடியாகத் தலையிடாது என்பதை நாம் நம்பலாம்" என்றும் திரு. தொண்டமான் சொன்னார்.

முன்னர் விட்ட தவறு போன்று இந்தியா இனியும் செய்யாது என்றும் அமைச்சர் தொண்டமான் கூறினார்.

## வாழை, மா மரங்களுக்கும் பயிர்க் காப்புறுதி வேண்டும்

யாழ்ப்பாணம், மே 21

வாழை, மா, தோடை, எலுமிச்சை போன்ற பயிர்களுக்கும் பயிர்க் காப்புறுதி திட்டத்தைக் கொண்டுவருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் கமநலசேவை திணைக்கள உதவி ஆணையாளர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்போது நெல்லுக்கு மட்டுமே பயிர்க்காப்புறுதித் திட்டம் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை ஏனைய பயிர்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்து, பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வீசிய காற்றினால் பல இடங்களிலும் வாழை மரங்கள் அழிந்துள்ளன. மாவட்டத்தில் இவ்வாறு வாழை மரங்கள் அழிவுற்ற பயிர்ச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் [illegible] கொண்டுவரப்பட்டது. [இ-5]

## இந்தியத் தேர்தல்: முக்கிய தகவல்கள்

இந்தியாவில் நேற்று 20 ஆம் திகதி 9 மநிலங்களிலும் 4 யூனியன் பிரதேசங்களிலும் முதலாம் கட்ட வாக்களிப்பு நடைபெற்றது. இரண்டாம் கட்ட வாக்களிப்பு 23 ஆம் திகதியும், மூன்றாவது கட்ட வாக்களிப்பு 26 ஆம் திகதியும் நடைபெறும். வாக்குகள் எண்ணும் வேலை 27 ஆம் திகதி காலை நடைபெறும். இந்த நிலையில் இந்தியாவின் 10 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் குறித்து சில முக்கிய தகவல்கள் இங்கே பிரசுரமாகின்றன.

★ உலகில் நடக்கும் பிரமாண்டமான ஜனநாயகத் தேர்தல் இது.

★ மொத்தமாக 55 கோடி வாக்காளர்கள் கலந்து கொள்கின்றனர். 10 கோடிக்கு மேல் முஸ்லிம் வாக்காளர்கள்.

★ என்றுமில்லாத வகையில் இந்தியாவின் மதசார்பின்மைக்கு சவாலாக அமைந்துள்ளது இத் தேர்தல்.

★ 106 வயதான காங்கிரஸ் கட்சிக்கு 1977இல் முதல் தோல்வி ஏற்பட்டது. 1989ல் இரண்டாவது தோல்வி ஏற்பட்டது. நேற்று ஆரம்பமான 1991 தேர்தலிலும் தோல்வி காணுமானால் காங்கிரஸின் அஸ்தமனம் ஆரம்பமாகி விட்டது என்று அர்த்தமாகி விடும்.

★ இந்து மத தீவிரவாத அமைப்பான பாரதீய ஜனதா இந்திரா காங்கிரஸுக்கு முக்கிய சவாலாக இத் தேர்தலில் உள்ளது.

★ 1989 தேர்தல் முடிந்து 18 மாத கால இடைவெளியின் பின்னர் நடைபெறுகிறது 1991 தேர்தல்.

★ ஸ்திரமான ஆட்சியை காங்கிரஸ்தான் தரும் என்பது ராஜீவின் உறுதி. ஆனால் சந்திரசேகரைப் பிரித்த வி.பி.சிங் கூட்டணி ஆட்சியை ஸ்திரமற்றதாக்கியது. சந்திரசேகரின் ஆட்சிக்கு வழங்கிய ஆதரவை இடைநடுவில் கைவிட்டு நிலைகுலைய வைத்து இன்னொரு தேர்தலுக்கு வழிவகுத்தது — என்ற குற்றச்சாட்டுகளும் ராஜீவின் மீது சுமத்தப்பட்டுள்ளன.

★ பாரதீய ஜனதாக் கட்சிக்கு வட இந்தியாவில் இந்தி பேசும் இந்துமக்கள் மத்தியில் தான் கூடிய ஆதரவு உண்டு. தென்னிந்திய மாநிலங்களில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஆதரவு இல்லை.

★ வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றம், மதசார்பின்மை ஆகியவற்றை முன்வைத்து போட்டியிடுகிறது.

★ சரிசமமாக அகில இந்திய ரீதியில் மூன்று பெரும் தேசியக் கட்சிக் கூட்டணிகள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றன.

1. இந்திரா காங்கிரஸ்
2. பாரதீய ஜனதா
3. தேசிய முன்னணி

காங்கிரஸ் வந்தால் ராஜீவ் பிரதமர், பாரதீய ஜனதா வந்தால் அத்வானி பிரதமர். தேசிய முன்னணி வந்தால் வி. பி. சிங் பிரதமர் என்ற நிலைமை இருந்து வருகிறது.

★ இந்திய தேர்தல் சரித்திரத்திலேயே என்றுமில்லாத அளவு வன்செயல் நிறைந்துள்ளது இத்தேர்தல்.

★ இதுவரை [18 5 1991 வரை] 9 வேட்பாளர்களும் 100க்கு மேற்பட்ட ஆதரவாளர்களும் தேர்தல் வன்செயல்களில் கொலையுண்டனர்.

★ தேர்தலை நடத்த அரசுக்கு செலவு 75 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடிப் பரீட்சை
### விஞ்ஞானம்

மே 22 ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகத்தில் நடைபெற இருந்த மேற்படி பரீட்சை மே 28 க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகி,
நியூப்பொலி,
உடுவில்.

[16738]



உ
சிவமயம்
யாழ்ப்பாணம், திருவண்ணைநகர்
அருள்மிகு வாலாம்பிகா சமேத
விசுவலிங்க வைத்தீசுவரசுவாமி
திருக்கோயில்
(வண்ணை. சிவன்கோயில்)

## ஆலய பரிபாலன சபை
## ஆதன வாடகை, குத்தகை

மேற்படி திருக்கோயிலுக்குரிய வீடு, கடை, காணி முதலிய ஆதனங்களைப் பெற்றுள்ளவர்கள் அவற்றின் விவரங்களை இதற்கென உரிய படிவங்களில் நிரப்பி 31 - 05 - 1991க்கு முன் பரிபாலன சபைக் காரியாலயத்தில் ஒப்படைக்கும் படியும். ஆதனங்களுக்குச் செலுத்தப்படவேண்டிய 1991 வைகாசி மாதம் முடிய உள்ள காலத்திற்கான வாடகை, குத்தகை ஆகியவற்றை 15 - 06 - 1991க்கு முன் மேற்படி காரியாலயத்தில் செலுத்தி கோயில் பூசைகள் ஒழுங்காக நடைபெற ஒத்துழைக்குமாறும் அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

சைவப்புலவர்:
வ. கந்தசாமி
தலைவர்.

சி. நடேஸ்வரன்.
செயலாளர்.

வண்ணார்பண்ணை [சி/5075]


# எல்லைக்கு வெளியே போராடும்வரை பேச்சுவார்த்தை என்பது நாடகமே!

## ராதா நினைவு தினத்தில் யோகி

யாழ்ப்பாணம், மே 21

ஒரு காலத்தில் அரந்தடிப் படையாக இருந்து, பிறகு எதிரியை தடுத்து நிறுத்தும் படையாய் வளர்ந்து, இன்று எதிரிகளின் முகாமைத்தேடிச் சென்று தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றுள்ளோம்; இந்தக் காலமாற்றத்தைப் புரிந்து கொண்டு மக்கள் போராட்டத்தில் இணைய வேண்டும். எமது எல்லைகளுக்கு வெளியே எதிரியை சந்திக்கின்ற நிலையிலேயே நாம் அவர்களுடன் பேசவேண்டும். அதுவரை பேச்சுவார்த்தை என்பது ஒரு நாடகமே!

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு யோகரத்தினம் யோகி இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களின் முன்னாள் தளபதி லெப். கேணல் ராதாவின் நான்காவது ஆண்டு நினைவு நிகழ்ச்சி நேற்று இரவு 7 மணியளவில் வண்ணார்பண்ணை ஐயனார் கோவில் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு. யோகி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீண்டகாலமாக ஒரு எதிரி முகாமைச் சுற்றி நின்று காவல் காப்பதில் ஏற்படும் இழப்புக்கள், எதிரி முகாம் ஒன்றைத் தாக்கி அழிக்கும் போது நாம் சந்திக்கும் இழப்புக்களை விட ஒப்பீட்டளவில் கூடியதாகும்.

எமது எல்லைகளை விஸ்தரிக்க—எல்லைக்கு அப்பால் போராட்டத்தை நடத்த எம்மில் குறைந்தது 50 ஆயிரம் பேர் ஆயுதம் ஏந்தத் தயாராக இருக்க வேண்டும்.

போராட்டத்தின் வளர்ச்சியை சரியாகப் பார்க்காது நம்மால் அதில் இணைய முடியாது.

போராட்டம் எமது எல்லைக்கு உள்ளே நடக்க வேண்டுமா? வெளியே நடக்க வேண்டுமா? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பும் நம் மீதே— மக்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளது.

பிரதேச, மத, சாதி, வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று போராட்டம் நடத்துவதால் நாம் என்றுமே தோற்பதில்லை—என்று அவர் சொன்னார்.

வண்ணார்பண்ணை இற்றூரவைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் வீர மரணமடைந்த போராளி சந்தோசத்தின் தந்தை திரு. சணபதிப்பிள்ளை மற்றும் பலர் உரையாற்றினர்.

லெப். கேணல் ராதாவின் உருவப்படம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. [ஆ-5]

## சீமெந்து ஊழியருக்கு இன்று போனஸ்

யாழ்ப்பாணம், மே 21

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஊக்குவிப்புப் பணம் [1990 ஆண்டு] இன்று. யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள தற்காலிக பணிமனையில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம்—

இதுவரை வழங்கப்படாமல் விடுபட்ட பண்டிகைக்கால முற்பணமும் அடுத்த வார மளவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ]

## இன்று கூட்டம்

குருநகர், மே 21

குருநகர் சனசமூக நிலைய முன்றலில் இன்று மாலை 6 மணிக்கு லெப். வாசனின் ஆறாவது நினைவு தினக் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உரையாற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-51]

## ம. எண்ணை விலை வீழ்ச்சி

தென்மராட்சி, மே 21

வவுனியா போக்குவரத்து ஓரளவு சீரானதைத் தொடர்ந்து. மண்ணெண்ணெய் சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளது.

விலையும் நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து வருகிறது. [ஒ-117]

## இந்திய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முறையை எதிர்பார்த்து இராணுவம் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது ஆனாலும் அங்கு வன்முறையினால் ஏழு பேர் உயிரிழந்தனர்

ஆந்திர மாநிலத்தில் சில இடங்களில் நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டன. ஹைதராபாத்திலும், செகந்திராபாத்திலும் விஷமிகள் கூட்டத்தைக் கலைக்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிலர் உயிரிழந்தனர்.

புதுடில்லி தவிர்ந்த, தேர்தல் நடந்த ஏனைய பிரதேசங்களில் வாக்களிப்புச் சுறுசுறுப்பாக இடம்பெற்றது

புதுடில்லியில் 40 முதல் 50 சதவீதமான வாக்காளர்களே வாக்களித்தனர்.

புதுடில்லியில் கடந்த ஞாயிறு இரவு தீவிரவாதிக் குழு, இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் மீது நடத்திய கிரனேட் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்தே, வாக்களிப்பில் மந்தம் காணப்பட்டது. அத்தாக்குதலில் இரண்டு பொலீஸ் அதிகாரிகள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

புதுடில்லி நகர வீதிகள் நேற்று வெறிச்சோடிக்காணப்பட்டன. [உ-ஒ-எ-த]

## முத்தமிழ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காணாத வகையிலே நடைபெறவுள்ள இம் முத்தமிழ் விழா நிகழ்வுகள் யாவற்றிலும் கலந்து கொண்டு பயன் [illegible] [illegible] சமூகம் கேட்டுள்ளது [ஒ]

## இடம்பெயர்ந்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கும் மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை —

எல்லோருக்கும் இலவசமாக விநியோகிக்கப்படும் 37 ஆம் கட்ட உலர் உணவு விநியோகமும் இம் மாதம் முடிவதற்குள் செய்து முடிக்கப்பட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது. [ஆ-5]


## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் ஏகாம்பரநாதன்

[இளைப்பாறிய இராமக்கோட்டு நீதிவானும் Proctor and Notary Public]

அச்சுவேலியை வதிவிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற மயில்வாகனம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஆகிய திரு. ம. ஏகாம்பரநாதன் காலமாகிவிட்டார்.

அன்னார் விவேகவதி, இராஜநாதன் D. D. G. P. H. S. [சுகாதார அமைச்சு, கொழும்பு], யோகராணி, பாஸ்கரதேவி, புஸ்பராணி, கனகசபநாதன் [கனடா], உருக்குமணிதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற யோகரத்தினம் [உபதபாலதிபர்], சரஸ்வதிதேவி, காலஞ்சென்ற நடராஜா [பொறியிலாளர்], காலஞ்சென்ற நரேந்திரன் [உதவி வைத்தியர்], கயிலாசநாதன் [M. L. T. யாழ். போதனா வைத்தியசாலை], ஜெகதீஸ்வரி, ஆறுமுகம் [உப அதிபர், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி], கணபதிப்பிள்ளை [ஆசிரியர், ந. ராஜராமலிங்க வித்தியாசாலை] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆவரங்காலில் 22 5 91 புதன்கிழமை காலை 7 மணியளவில் நடைபெறும்

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

சிவன் வீதி,
ஆவரங்கால். [16740]

### திருமதி மகேஸ்வரி கந்தையா

[ஓய்வுபெற்ற ஆசிரியை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்]

திருமதி மகேஸ்வரி கந்தையா அவர்கள் 19-5-91 அன்று அகால மரணமானார்.

இவர் திரு சேனர் கந்தையா [ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/கரணவாய் மகா வித்தியாலயம்] அவர்களின் அன்பு மனைவியும், கலைஞானபுவனவதி [ஆசிரியை உவுனியா], திரு விக்னானந்தவேல் [கனடா], திரு விவேகானந்தசேயோன் [கனடா], திரு சுகிர்தானந்தசேயோன் [கனடா], திரு. நேமிநாதன் [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு சாம்பசிவம் [கனடா], திருமதி இந்திரா [கனடா], திருமதி தவனேஸ்வரி [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், சாந்தி, கோசலா, மிதிலாதேவி, ஹேமா, லக்கினா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-5 91 [இன்று] செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. சேனர் கந்தையா
[கணவன்]

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(16866)



## வேதாகம அறிவுப் போட்டி

இலங்கை வேதாகமச் சங்கத்தால் நடாத்தப்படும் வேதாகம அறிவுப் போட்டியின், யாழ்ப்பாணக் குழுக்கள் கலந்து கொள்ளும் போட்டிகள் நாளை புதன்கிழமை 22 - 05 - 1991 காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் டரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பங்கு பற்றும் குழுக்கள் தவறாது சமுகம் தரவும்.

செயலாளர்,
வை. எம். சி. ஏ.,
யாழ்ப்பாணம்.

[16865]



## மரண அறிவித்தல்

### நமசிவாயம் பொன்னையா

மயூரா ரேடிங் சென்றர் உரிமையாளர் நமசிவாயம் பொன்னையா [20-05-91] நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற இராமலிங்கம், கொழும்பு ஸ்ரோர்ஸ் உரிமையாளர் சின்னத்துரை ஆகியோரின் சகோதரனும், நல்லம்மா, சுப்பிரமணியம் [சுவிஸ்] ஆகியோரின் தமப்பனாரும், சின்னத்தம்பி, கமலாதேவி ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தி, றாஜந்தி, மயூரன், மகினன், பிரியந்தி, நந்தகுமார் [சுவிஸ்], முரளிதரன் [லண்டன்], அருந்ததி, கௌரி, ரேணுகாதேவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3 மணிக்கு புலோப்பளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

"பொன்னகம்"
புலோப்பளை,
பளை.

தகவல்:
சு. கமலாதேவி
[மருமகள்]

[16741]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org